## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## இரண்டாம் பத்து

### பத்தாம் திருமொழி - மஞ்சாடு
### திருக்கோவலூர்

** மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும் *
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம் *
எஞ்சாமல் வயிற்று அடக்கி ஆலின் மேல் ஓர் * இளந்தளிரில்
கண் வளர்ந்த ஈசன் தன்னை **
துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணைத் தென்பால் *
தூய நான்மறையாளர் சோமுச் செய்ய *
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 1

கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம் *
தீபம் கொண்டு அமரர் தொழப் பணங்கொள் பாம்பில் *
சந்தணி மென்முலை மலராள் தரணி மங்கை *
தாம் இருவர் அடி வருடும் தன்மையானை **
வந்தனை செய்து இசை ஏழ் ஆறங்கம் * ஐந்து
வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும் *
சிந்தனை செய்து இருபொழுதும் ஒன்றும் * செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 2

கொழுந்தலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக் *
கோள் முதலை வாள் எயிற்றுக் கொண்டற்கு எள்கி *
அழுந்திய மா களிற்றினுக்கு அன்று ஆழி ஏந்தி *
அந்தரம் மேவரத் தோன்றி அருள் செய்தானை **
எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில் காட்ட *
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட *
செழுந்தட நீர்க்கமலம் தீவிகை போல் காட்டும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 3

தாங்க அரும்போர் மாலி படப் பறவை ஊர்ந்து *
தராதலத்தோர் குறை முடித்த தன்மையானை *
ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் *
அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான் தன்னை **
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக் *
குழாவரி வண்டிசை பாடும் பாடல் கேட்டு *
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 4

கறை வளர் வேல் கரன் முதலாக் கவந்தன் வாலி *
கணை ஒன்றினால் மடிய இலங்கை தன்னுள் *
பிறை எயிற்று வாள் அரக்கர் சேனை எல்லாம் *
பெருந்தகையோடு உடன் துணித்த பெம்மான் தன்னை **
மறை வளரப் புகழ் வளர மாடந்தோறும் *
மண்டபம் ஒண்தொளி அனைத்தும் வாரம் ஓத *
சிறை அணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 5

உறி ஆர்ந்த நறுவெண்ணெய் ஒளியால் சென்று * அங்கு
உண்டானைக் கண்டு ஆய்ச்சி உரலோடு ஆர்க்க *
தறி ஆர்ந்த கருங்களிறே போல நின்று *
தடங்கண்கள் பனி மல்கும் தன்மையானை **
வெறி ஆர்ந்த மலர்மகள் நாமங்கையோடு *
வியன் கலை எண்தோளினாள் விளங்கு * செல்வச்
செறி ஆர்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 6

இருங்கை மா கரி முனிந்து பரியைக் கீறி *
இன விடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து *
வரும் சகடம் இற உதைத்து மல்லை அட்டு *
வஞ்சம் செய் கஞ்சனுக்கு நஞ்சு ஆனானை **
கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று *
காய் எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட *
செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 7

** பார் ஏறு பெரும் பாரம் தீரப் * பண்டு
பாரதத்துத் தூது இயங்கி * பார்த்தன் செல்வத்
தேர் ஏறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை *
செருக் களத்துத் திறல் அழியச் செற்றான் தன்னை **
போர் ஏறு ஒன்று உடையானும் அளகைக் கோனும் *
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர் போல் *
சீர் ஏறு மறையாளர் நிறைந்த செல்வத் *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 8

தூ வடிவின் பார்மகள் பூமங்கையோடு *
சுடர் ஆழி சங்கு இருபால் பொலிந்து தோன்ற *
கா வடிவின் கற்பகமே போல நின்று *
கலந்தவர்கட்கு அருள் புரியும் கருத்தினானை **
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை *
செம்பொன் செய் திருவுருவம் ஆனான் தன்னை *
தீ வடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு *
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே 9

** வாரணம் கொள் இடர் கடிந்த மாலை * நீல
மரதகத்தை மழை முகிலே போல்வான் தன்னை *
சீரணங்கு மறையாளர் நிறைந்த * செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் என்று **
வாரணங்கு முலை மடவார் மங்கை வேந்தன் *
வாள் கலியன் ஒலி ஐந்தும் ஐந்தும் வல்லார் *
காரணங்களால் உலகம் கலந்தங்கு ஏத்தக் *
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே 10

**அடிவரவு:** மஞ்சாடு கொந்து கொழுந்து தாங்கு கறை உறி இருங்கை பார் தூவடிவின் வாரணம் இருந்தண்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**